# மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், போச்சம்பள்ளி

**OS.No. 27/2013 .நாள். 11.01.2023**

போச்சம்பள்ளி மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டடது. சாட்சி திறந்த நீதிமன்றத்தில் அழைக்கப்பட்டு ஆஜர். நீதிமன்றத்தில் கிரேடு 3 பென்ச் கிளர்க் திரு. ராமன் அவரால் சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது. உரிமையியல் விசாரணை சட்டம் பிரிவின் கீழ் விசாரணை செய்யப்பட்டார்.

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | **சகுந்தலா** | **வயது** | |
| **த/பெ. க/பெ.** | **முனியப்பநாயுடு** | **மதம்** | |
| **முகவரி** | | **தொழில்** | |

**<u>பி.சா. 1 ஆஜர். வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

எனக்கு திருமணம் எப்போது ஆனது என்று தெரியாது. வழக்கு சொத்து பற்றி எனக்கு எத்தனை ஆண்டுகளாக தெரியும் என்றால் அதுவும் எனக்கு தெரியாது. தாவா சொத்தானது வெங்கடப்ப நாயுடுக்கு பிதுராஜ்ஜியம் மூலமாக பாத்தியப்பட்டது என்றால் சரிதான். வெங்கடப்பா நாயுடு அவருக்கு பாத்தியப்பட்ட சொத்தினை 05.08.1950 ல் பெரிய தம்பி கவுண்டர் குமாரன் முத்து கவுண்டர் என்பவருக்கு அடமானம் செய்து கொடுத்திருந்தார் என்றால் சரிதான். வெங்படப்ப நாயுடு கிருஷ்ணகிரி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண். 247/1960 என்ற வழக்கினை ரூ. 770/- செலுத்த உத்தரவிடக்கோரி தாக்கல் செய்திருந்தார் என்றால் சரிதான்.

2) மேற்படி வழக்கில் 1960 ல் முத்துக்கவுண்டருக்கு ஆதரவாக தீர்ப்பாகியுள்ளது என்று சொன்னால் சரியல்ல. அந்த வழக்கு என்ன ஆனது என்று எனக்கு தெரியாது. அசல் வழக்கு எண். 247/1960 ல் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பின் அடிப்படையில் பணம் கட்டாத காரணத்தால் 27.12.1967 ஆம் தேதியில் வெங்கடப்ப நாயுடு அவருக்காகவும், அவரது மைனர் மக்கள் பாலகிருஷ்ணன், மாரியப்பன் ஆகியோருக்காகவும் மற்றும் சின்னசாமி , ராஜப்பன் ஆகியோர் சேர்ந்து சின்னப்ப நாயுடு மனைவி போடியம்மாள் அவரது மகன் முனியப்பநாயுடு ஆகியோருக்கு நிபந்தனையுடன் கிரய பத்திரம் எழுதி வைத்துள்ளார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. போடியம்மாள் எனது மாமியார் ஆவார். முனியப்ப நாயுடு எனது கணவர் ஆவார்.

3) எதிர் வழக்குரை நான் போட்ட பதிலா என்றால் எனக்கு படிக்க தெரியாத காரணத்தால் அது பற்றி எனக்கு தெரியாது. எதிர் வழக்குரையில் என்ன எழுதியருக்கிறது என்று எனக்கு தெரியாது. எதிர்வழக்குரையில் கண்ட சங்கதிகள் யாரால் சொல்லப்பட்டது என்று சொன்னால் அதுவும் எனக்கு தெரியாது. 27.12.1966 ஆம் தேதிய கிரய பத்திரம் பற்றியும் எனக்கு எதுவும் தெரியாது. மேற்படி கிரய பத்திரத்தில் கண்ட நிபந்தனைப்படி மேற்படி தொகையை நீதிமன்றத்தில் செலுத்தவில்லை என்று சொன்னால் சரியல்ல. யார்எப்போது செலுத்தினார்கள் என்றால் எனது மாமியார் செலுத்தினார் ஆனால் எப்போது செலுத்தினார் என்று எனக்கு தெரியாது. செலுத்தியதற்க ஆதாராம் உள்ளதா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

4) அடமானம் ரத்து செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை. எனது கணவரோ, மாமியாரோ கிரய பத்திரத்தின் கண்ட பணத்தினை செலுத்தியதற்கான ஆதாரம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் எடுத்து வருகிறேன். வீட்டில் உள்ளது. இரசீது உள்ளதாக வழக்கில் சொல்லவில்லை. கிரய பத்திரத்தில் உள்ள நிபந்தனைப்படி போடியம்மாளோ, முனியப்பநாயுடுவோ மேற்படி தீர்ப்பில் சொல்லப்பட்டுள்ள அடமான தொகையை செலுத்தியிருந்தால் அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்போம் என்று சொன்னால் சரியல்ல.

5) மேற்படி கிரய பத்திரத்தில் டிகிரி தொகையை செலுத்தினார் கிரய பத்திரத்தை மீளப் பெறமுடியும் என்ற நிபந்தனை முக்கியமான நிபந்தனை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. டிகிரி தொகையை கட்டி வாபஸ் பெற்று விட்டோம். வாபஸ் பெற்றதற்கு ஆதாரம் தாக்கல் செய்துள்ளோம். அவ்வாறு ஆதாரம் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. மேற்படி கிரய பத்திரம் அமலுக்கு வரவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

6) தாவா சொத்தை வெங்கடப்ப நாயுடு, அவரது வாரிசுகளும், அனுபவித்து வந்தார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்திற்கு அருகில் எனக்கு சொத்துள்ளதா என்றால் உள்ளது வாதிக்கு அங்கு சொத்தே இல்லை. தாவா சொத்திற்கு அருகில் உள்ள சொத்திற்கு முனியப்ப நாயுடு பெயரில் பட்டா உள்ளதா என்றால் தற்போது எனது பிள்ளைகள் பெயரில் உள்ளது. மேற்படி தாவா சொத்தில் உள்ள

பட்டாவானது அதிகாரிகள் வந்து விசாரணை செய்து கொடுத்தார்களா என்றால் சரிதான். தாவா சொத்திற்கு அவ்வாறு விசாரணை செய்து பட்டா கொடுத்தார்கள் என்றால் சரிதான்.

7) தாவா சொத்தில் போடியம்மாள், முனியப்ப நாயுடு பெயரில் பட்டா எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. பட்டா கொடுத்துள்ளார்கள். எனது கணவர் இறந்த பிறகு எனது பெயருக்கும், தற்போது எனது பிள்ளைகள் பெயருக்கும் மாற்றப்பட்டுள்ளது. பத்திரமும் போட்டுள்ளோம். மேற்படி பத்திரம், பட்டா வழக்கில் தாக்கல் செய்துள்ளோம். பட்டா, பத்திரம் இந்த வழக்கு சொத்திற்கு சம்மந்தம் இல்லாதது என்று சொன்னால் சரியல்ல. 27.12.1967 ஆம் தேதி கிரய பத்திரத்தின் அடிப்படையில் வெங்கடப்ப நாயுடுவும், அவரது வாரிசுகளும், தாவா சொத்தை அனுபவித்து வந்தார்கள் என்றால் என்னுடைய அனுபவத்தில்தான் சுவாதீனம் உள்ளது.

8) வழக்கு சொத்தை பொறுத்து என்னுடைய பெயரில் உள்ள பட்டாவும், கந்தாய இரசீதும் தாக்கல் செய்யவில்லை. வழக்கு சொத்தை பொறுத்து முனியப்ப நாயுடு, போடியம்மாள் ஆகியோர் பெயரில் எவ்வித வருவாய் ஆவணங்களையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. வெங்கடப்ப நாயுடும், அவரது வாரிசும் தாவா சொத்துக்களையும், இதர சொத்துக்களையும் 40 வருடங்களுக்கு முன்பு வாய்மொழியாக பாகம் செய்து கொடுத்துவிட்டார்கள் என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. வாய்மொழி பாகத்தில் சின்னசாமி பாகத்திற்கு தாவா சொத்து ஒதுக்கப்பட்டுள்ளதா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

9) வாய்மொழி பாகத்தின் அடிப்படையில் சின்னசாமி தபசில் சொத்தை அனுபவம் செய்து வந்தார் என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கு சின்னசாமி பெயரில் பட்டா ஏற்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. எனது பெயரில் உள்ள தாவா சொத்திற்கு மட்டும் பட்டா கொடுத்துள்ளார்கள் என்றும், பாத்தியப்படாத வழக்கு சொத்திற்கு பட்டா கொடுக்கவில்லை என்றால் கொடுத்துள்ளார்கள். எனது கணவருக்கு பாத்தியப்பட்ட, அவரது அனுபவத்தில் இருந்து வந்த அனைத்து சொத்துக்களுக்கும் பட்டா வாங்கிவிட்டோம்.

10) வழக்கு சொத்திற்கு சின்னசாமி பெயரில் பட்டா கொடுக்கப்பட்டுள்ள விவரம் எனக்கு எதுவும் தெரியாது. பட்டா கொடுத்த விவரம் எனக்கு முதலில் தெரியும் என்று

சொன்னால் சரியல்ல. எப்போது தெரியும் என்றால் அது தெரியாது. சின்னசாமிக்கு பட்டா கொடுத்த விவரம் எனக்கு முன்பே தெரிந்திருந்தும் மேற்படி பட்டாவை ரத்து செய்ய எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. 09.08.2006 ஆம் தேதி சின்னசாமி வாதி தண்டபாணிக்கு வழக்கு சொத்தை கிரயம் செய்து கொடுத்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி கிரய தேதியில் வழக்கு சொத்துக்களையும், வாதி அனுபவித்து வருகிறார் என்று சொன்னால் சரியல்ல. வாதி பெற்ற கிரயத்தின் அடிப்படையிலும், தாவா சொத்திற்கு விசாரணையின் அடிப்படையில் போச்சம்பள்ளி வட்டாட்சியர் பட்டா கொடுத்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல.

11) 09.08.2006 ஆம் தேதி தாவா சொத்தை வாதி கிரயம் பெற்ற பிறகு மேற்படி தேதியிலிருந்து வழக்கு சொத்தை யாருடைய இடையூறு மின்றி அனுபவம் செய்து, பட்டா பெற்று கந்தாயம் செலுத்தி தற்போது வரை அனுபவம் செய்து வருகிறார் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தை பொறுத்து வாதி சந்தூர் சென்ட்ரல் பேங்க் ஆப் இண்டியாவில் அடமானக் கடன் பெற்றுள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. கிருஷ்ணகிரி மாவட்ட நிலஅபகரிப்பு தடுப்பு பிரிவில் தாவா சொத்தை தண்டபானியும், சின்னசாமியும் அபகரித்து விட்டதாக புகார் கொடுத்தேன் என்று சொன்னால் சரிதான். அது எனது சொத்தாகும். அங்கு நிலம் எனக்கு சொந்தமானது என சொல்லி எழுதி பெற்றுவிட்டு அனுப்பிவிட்டார்கள்.

12) 2013 ஆம் ஆண்டுதான் எங்களுக்கு நில அபகரிப்பு பிரிவில் புகார் கொடுக்கும்போதுதான் 27.12.1967 ஆம் தேதிய பத்திரம் தெரிவந்தது என்றால் சரிதான். வாதி பெயரில் உள்ள 09.08.2006 ஆம் தேதியிட்ட பத்திரத்தை பொறுத்து நானோ இதர பிரதிவாதிகளோ வாதி மீது எவ்வித வழக்கும் போடவில்லை. தாவா சொத்தை பொறுத்து வாதி பெயரில் உள்ள பட்டாவை ரத்து செய்ய எவ்வித மனுவும் போடவில்லை. நில அபகரிப்பு பிரிவில் கொடுத்த புகாரில் தாவா சொத்தில் எனக்கு எவ்வித உரிமையோ, அனுபவமோ இல்லாத காரணத்தால் வாதி மீது எவ்வித நடவடிக்கையோ எடுக்க வில்லை என்று சொன்னால் சரியல்ல.

13) அங்கு நடவடிக்கை எடுக்காத காரணத்தால் நாங்கள் 2013 ஆம் வருடம் வாதிக்கு தபசில் சொத்தில் இடையூறு செய்தோம் என்றால் எங்கள் சொத்தை விட

சொல்லி கேட்டோம். தாவா சொத்துக்களை பொறுத்து வருவாய் வட்டாட்சியர், ஆவணங்களை தர வேண்டுமென நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தோமா என்று எனக்கு அது பற்றி தெரியாது. பி.சா.ஆ. 6 ஆவணத்தை பற்றி எனக்கு தெரியாது. மேற்படி ஆவணத்தில் என்ன சர்வே எண் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அதுவும் தெரியாது. பி.சா.ஆ.4 ஆவணத்தில் சின்னசாமி, மாரியப்பன், முருகன் ஆகியோர் பெயரில் கணிணி பட்டா நகல் தாக்கல் செய்துள்ளோம். அதில் எந்த சர்வே எண்ணும் குறிப்பிடப்படவில்லை என்று சொன்னால் சரிதான்.

14) நீதிமன்ற சான்றுகளை கேட்டு அனுமதிக்கப்பட்ட மனுவின் அடிப்படையில் வட்டாட்சியர் அலுவலகத்தில் இருந்து பெறப்பட்ட ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்துக்களை பொறுத்து எந்த ஒரு வருவாய் துறை ஆவணங்களும் முனியப்ப நாயுடு, போடியம்மாள், எனது பெயரில் இல்லை என்ற காரணத்தால்தான் எவ்வித ஆவணங்களையும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. வழக்கு சொத்தை பொறுத்து பட்டாவானது, சின்னசாமி, மாரியப்பன் ஆகியோர் பெயரில் மாறியுள்ளது என்பதை மாற்றுவதற்காக கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சி தலைவரிடம் மனு எதுவும் கொடுக்கவில்லை.

15) மனு கொடுத்ததாக எவ்வித ஆவணமும் தாக்கல் செய்துள்ளேனா என்று எனக்கு தெரியாது. நில அபகரிப்பு பிரிவில் கொடுத்த மனுவில் என்ன எழுதப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியாது. முதல் விசாரணையில் என்ன சொல்லப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியாது. வழக்கில் என்ன ஆவணங்களை தாக்கல் செய்துள்ளோம் என்று குறிப்பிட்டு எனக்கு தெரியாது. வழக்கு சொத்தை பொறுத்து போடியம்மாள், முனியப்ப நாயுடுக்கு எந்த காலத்திலும், உரிமையோ, சுவாதீனமோ ஏற்படவில்லை என்று சொன்னால் ச ரியல்ல. வழக்கு சொத்துக்கள் எங்களது ஆளுகையிலும், அனுபவத்திலும் இருப்பதாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. வழக்கு சொத்து வாதிக்கு தனித்து பாத்தியப்பட்டு அவரது ஆளுகையிலும், அனுபவத்திலும் இருந்து வருகிறது என்று சொன்னால்ச ரியல்ல. வழக்கு ஆவணங்கள் வழக்கிற்காக ஜோடிக்கப்பட்டு தயாரிக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. வழக்கு சொத்து எங்களுக்கு பாத்தியப்படாமல் நாங்கள்

வழக்கை நடத்தி வருவதால் வாதியின் நஷ்ட ஈட்டு தொகையோடு வழக்கு தீர்ப்பாக வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

சாட்சி கூறியதை என்னால் தட்டச்சருக்கு
கூறப்பட்டு சாட்சியின் முன் சாட்சிக்கு படித்து
காட்டி சாட்சியால் படிக்கப்பட்டு, சரியென
ஒப்புக்கொண்டார்.

S V
SHANMUGANATHAN

District Munsif cum Judicial Magistrate
Digitally signed by S V SHANMUGANATHAN
Location: Pochampalli

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நடுவர், போச்சம்பள்ளி. கிருஷ்ணகிரி மாவட்டம்.